Registered as a Newspaper

பக்கங்கள் 12 | விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 90

சனிக்கிழமை
24 பெப்ரவரி 2024

மாசி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கை வாங்கிறதும் கால் பிடிக்கிறதும் தலையாட்டுறதும் அரசியலில பாலபாடம் பாருங்கோ"

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை

# இலங்கை தொடர்பில் தீவிர கண்காணிப்பு!

கொழும்பு, பெப்ரவரி 24

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடரின் போது இலங்கை தொடர்பில் இம்முறை கூடுதலான கவனம் செலுத்தப்படும் என்று தெரியவருகின்றது. இதனால் அணிசேரா நாடுகளின் ஆதரவுடன் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையை இம்முறை இலங்கை எதிர்கொள்ள வியூகம் வகுத்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. ☞11



## கச்சதீவு அந்தோனியாருக்கு இன்று திருவிழாத் திருப்பலி

இந்திய மக்கள் புறக்கணிப்பு

யாழ். பெப். 24

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று மாலை 4 மணியளவில் ஆரம்பமானது.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் நற்கருணைப் பவனி ஆகியன இடம்பெற்றன. திருவிழாத் திருப்பலி இன்று காலை 7 மணிக்கு யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார் ☞11

## புதையல் தோண்டியோர் முல்லைத்தீவில் கைது

முல்லைத்தீவு, பெப். 24

முல்லைத்தீவு - புதுமாத்தளன் பகுதியில் வீதித் திருத்த வேலைகளுக்காக மணல் அகழ்வதாகத் தெரிவித்து புதையல் தோண்டிய நால்வர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுமாத்தளன் பகுதியில் உள்ள வீட்டுக் ☞11

## உயர் பாதுகாப்பு வலயத்தில் பொதுமக்கள் நேற்று வழிபாடு

யாழ்ப்பாணம், பெப். 24

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஆலயங்களுக்கு 34 வருடங்களின் பின்னர் சென்ற பொதுமக்கள் அங்கு வழிபாடுகளில் ஈடுபட்டனர். ☞11

## பேருந்திலிருந்து வீழ்ந்து இளைஞர் பரிதாபச் சாவு



யாழ்ப்பாணம், பெப். 24

பேருந்திலிருந்து தவறி வீழ்ந்த இளைஞர் ஒருவர், தலைநசுங்கிச் சாவடைந்தார். நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகவே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றுள்ளது.

கற்சிலைமடு, ஒட்டுசுட்டானைச் சேர்ந்த அ. நிதர்சன் (வயது-31) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

விபத்துத் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:-

யாழ்ப்பாணம் புதிய சந்தையில் ☞11

தேர்த்திருவிழாவில்

## நகைத் திருட்டில் ஈடுபட்ட இரண்டு பெண்கள் கைது!

யாழ்ப்பாணம், பெப். 24

யாழ். வண்ணை கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழாவில், தங்க நகைத்திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள், யாழ்ப்பாணப் பிராந்தியப் பொலிஸ் அத்தியட்சகர் ஜகத்நிஷாந்தவின் கீழ் இயங்கும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் கூடியிருந்த நிலையில் கூட்ட நெரி ☞11

பலாலி - வயாவிளானில்

## ஊடகவியலாளர்களுக்கு இராணுவம் அச்சுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 24

பலாலி, வயாவிளானில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களுக்கு இராணுவத்தினரால் நேற்று அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதுடன், செய்தித் தேவைக்காக ஊடகவியலாளர்கள் பதிவுசெய்த ஒளிப்படங்கள் மற்றும் வீடியோக்களையும் இராணுவத்தினர் அழித் ☞11

## 40,000க்கும் மேற்பட்ட போலி மருத்துவர்கள்

மக்களே அவதானம்!

கொழும்பு, பெப். 24

நாடு முழுவதிலும் 40 ஆயிரத்துக்கும் அதிகமான போலி மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வருகின்றனர் என்று தெரியவந்துள்ளது. ☞11



## ஹவுத்திக்கு எதிரான போரில் இலங்கைக்கு அமெ. பாராட்டு

கொழும்பு, பெப். 24

ஹவுத்தி கிளர்ச்சியாளர்களிடமிருந்து செங்கடலைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா தலைமையில் முன்னெடுக்கப்படும் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கைக்கு இலங்கை ஆதரவு வெளியிட்டதை வொஷிங்டன் பாராட்டியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுக் காலை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ☞11

நிபந்தனையற்ற வகையில்

# வழக்குகளை கைவாங்காவிடில் நீதிமன்றில் எதிர்கொள்வோம்

தமிழரசுக் கட்சி தீர்மானம்

கிளிநொச்சி, பெப். 24

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு மற்றும் பொதுக்குழுக் கூட்டங்களுக்கு எதிராக வழக்குகளைத் தொடுத்துள்ள கட்சி உறுப்பினர்களிடம் நிபந்தனையற்ற வகையில் வழக்குகளைத் திரும்பப் பெறக்கோருவது என்றும், அவ்வாறு நிபந்தனையற்ற வகையில் வழக்குகளைத் திரும்பப்பெறுவதற்கு அவர்கள் இணங்காவிட்டால், தொடர்ந்து வழக்குகளை எதிர்கொள்வது என்றும் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்கள் ஒன்றுகூடி முடிவெடுத்தனர்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் தமக்குள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை கிளிநொச்சியில் நேற்று நடத்தினார்கள்.

"வழக்குத் தொடுத்தவர்கள் எவ்வித நிபந்தனையும் விதிக்காமல் வழக்கை கைவாங்கவேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் கட்சி வழக்கை ☞11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடைமையில் போதைப்பொருள்; கைக்குழந்தையுடன் பெண் கைது

கொழும்பு, பெப். 24
சிறையிலுள்ள தனது கணவருக்குக் கொடுப்பதற்காக ஆடையில் மறைத்து உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளை எடுத்துச் சென்ற பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
குறித்த பெண் 7 மாதக் கைக்குழந்தையுடன் சென்றபோதே கைதாகியுள்ளார் என்று களுத்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# சூரிய மின்கல வீட்டுத்திட்டம்: எட்டப்பட்டது சுமுகமான தீர்வு

யாழ்ப்பாணம், பெப். 24
**கடந்த டிசெம்பர் மாதம் இடம்பெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்திய சூரியமின்கல வீட்டுத் திட்டங்களுக்கு சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது.**


யாழ். மாவட்டத்தில்சூரியமின்கலங்களைப் பொருத்திய வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட இருந்தன. அந்த வீடுகளில் அமைக்கப்படும் சூரிய மின்கலங்களின் மூலம் பெறப்படுகின்ற மின்சாரத்தை வீடுகளை அமைக்கும் நிறுவனத்துக்கே வழங்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. இதற்கு எதிர்ப்பு வெளியிடப்பட்டிருந்தது. இதன் பின்னர் வீடமைக்கும் நிறுவனத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து நிபந்தனைகளில் தளர்வு ஏற்பட்டுள்ளது.
"யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு வீடுகளுக்கும் பொருத்தப்படவிருந்த சூரிய மின்கலங்கள் அனைத்தையும் ஒன்றாக்கி 900 ஏக்கரில் அவற்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் இடத்தை அடையாளம் காணும் நடவடிக்கை இடம்பெறுகின்றது. எனவே, விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கு வீடுகள் மாத்திரமே கிடைக்கும். அவர்களது வீடுகளுக்கு சூரியமின்கலம் பொருத்தப்படாது" என யாழ். மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன், கடந்த வாரம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.
இதனையடுத்து கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "கடந்த காலங்களில் சூரிய மின்கலத்துடன் வீடு அமைக்கப்படும். தமது வீட்டை அடிக்கடி குறித்த நிறுவனத்தினர் வந்து கண்காணிப்பார்கள் என்பதால் பலர் வீட்டுத் திட்டத்துக்கு விண்ணப்பிக்காமல் விட்டிருப்பார்கள். தற்போது திட்டம் மாற்றப்பட்டுள்ளதால் மீண்டும் மக்களிடம் விண்ணப்பத்தைக் கோரவேண்டும்" - என்றார். (ஓ-125)

# இணையவழியூடாக ஈ-சிகரெட் இறக்குமதி
## வலையமைப்பு முறியடிப்பு

கொழும்பு, பெப். 24
இணையவழியூடாக சட்டவிரோதமான முறையில் இலத்திரனியல் சிகரெட்டுகளை இலங்கைக்கு இறக்குமதி செய்து விற்பனை செய்யும் வலையமைப்பு கலால் பிரிவினரால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.
இதன்போது 30 இலட்சம் ரூபா பெறுமதியான ஈ - சிகரெட்கையிருப்பு பறிமுதல் செய்யப்பட்டதுடன் 25 வயதுடைய சந்தேகநபர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.
இந்தச் சட்டவிரோத செயற்பாட்டால் அரசாங்கத்துக்கு 10 கோடி ரூபா வரி வருமானம் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று ஜாஎல கலால் அத்தியட்சகர் குறிப்பிட்டார்.
இதேவேளை தென்னிலங்கையில் ஈ - சிகரெட்டுகளுக்கு சிறுவர்கள், இளைஞர் சமூகம் அதிகளவில் அடிமையாகி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# தேசிய விருதில் குளறுபடி; சட்டநடவடிக்கை பாயும்!

கொழும்பு, பெப். 24
சட்டத்துக்கு முரணாக தேசிய விருதுகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவ்வாறான நாமங்களைத் தவறாகப் பயன்படுத்துவோருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
தேசிய விருதுகளுக்காகப் பயன்படுத்தப்படும் நாமங்களை வேறு தரப்பினர் தவறாகப் பயன்படுத்துவது குறித்து தெரியவந்துள்ளது.
அவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக உடன் சட்ட நடவடிக்கை எடுக்கப் படவேண்டும். தேசிய விருதுகளைப்பெறவிரும்பும் தகுதியுள்ள இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கானபுதியமுறைமை ஒன்றைத் தயாரிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.
அதன்படி, ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுக்கு அமைய, ஜனாதிபதியின் செயலாளரால் நியமிக்கப்பட்ட நிபுணர்களைக் கொண்ட தேர்வுக் குழுவால்விருது பெறுபவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.
தேர்ந்தெடுக்கப்பட்ட விருது பெற்றவர்களின் பெயர்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு, குறிப்பிட்ட திகதியில் ஜனாதிபதி தலைமையில் விருதுகள் வழங்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)



# கலைவேந்தன் ஸ்ரீசங்கரின் 44 ஆவது நினைவுதினம்

யாழ்ப்பாணம், பெப். 24
இலங்கைத் தமிழ்க் கலைத்துறையில் மேடை நாடகத்தில் தொடங்கி உள்நாட்டுத் திரைப்படம் மற்றும் தென்னிந்தியத் திரைப்படத்தில் முத்திரை பதித்த பிரபல கலைஞர் கலைவேந்தன் ஸ்ரீசங்கரின் 44ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொழும்பு பழைய நகரசபை மண்டபத்தில், அவரது கலையுலக வாரிசு கலைஞர் சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.
கலைவேந்தன் ஸ்ரீசங்கர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த 'ராஜராஜசோழன்' திரைப்படத்தில் அவருடன் இணைந்து நடித்து இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் கலைப்பாலம் அமைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# ஐஸுடன் இருவர் கைது

யாழ்ப்பாணம், பெப். 24
உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவில் இளைஞர்கள் இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். 28 மற்றும் 25 வயதுடைய இரண்டு சந்தேக நபர்களிடமிருந்தும் 4 கிராம் 400 மில்லிகிராம், 1 கிராம் 100 மில்லிகிராம் உயிர்கொல்லி ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஒ-23)

## தலைவர், செயலரின்
# அறைத்திறப்புகளுடன் இனந்தெரியாத நபர் மாயம்

சாவகச்சேரி, பெப். 24
சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றக் கட்டடத்தினுள் புகுந்த இனந்தெரியாத நபர் அலுவலகத்திலுள்ள தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரின் அறைகளைப் பூட்டி திறப்பைக் கொண்டு சென்றுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெற்றுள்ளது. அலுவலகத்தில் பெண் எழுதுநர் இருந்தபோதிலும் அவர் எழுந்து வருவதற்கு முன்னர் அறைகளைப் பூட்டி திறப்புகளைக் கொண்டு தப்பியோடியுள்ளார். (ஒ-9)

# தீர்த்த உற்சவம்

கோண்டாவில் கிழக்கு, நாகபூஷணி அம்பாள் ஆலய மாசிமகத் தீர்த்த உற்சவம் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை, சிறப்புப் பூஜைகள் மற்றும் அன்னதானம் என்பன இடம்பெறவுள்ளன. (ப-66)

# பல்கலை மானியக் குழுவுக்குப் பதில் உயர்கல்வி மேம்பாடு ஆணையம்

பல்கலைக்கழக மானியக் குழுவுக்குப் பதிலாக தேசிய உயர்கல்வி மேம்பாட்டு ஆணையகத்தை நிறுவுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.
இது தொடர்பான சட்டவரைவு எதிர்வரும் மார்ச் மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் புதிய ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும்.
இதனுடன் குடியரசுத் தலைவர் மற்றும் அரசமைப்புச் சபையால் நியமிக்கப்பட்ட 11 உறுப்பினர்களை இந்த ஆணையம் உள்ளடக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பகைவருக்காகவும் செபிப்போம்



தவக்கால சிந்தனை

உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள். உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் இவ்வாறு செய்தால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள் .
பகைவரை அன்பு செய்வது கடினமானது தான் ஆனாலும் எங்களுக்குத் தீமை செய்பவர்களை நாங்கள் மன்னிப்பது போல எங்களை மன்னியும் என்று செபிக்கின்றோமே. "இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்" என்கிறார் வள்ளுவர். பகைவரை அன்பு செய்வதும் அவர்களுக்காக இறைவேண்டல் புரிவதும் அவர்களுக்கு நன்மை புரிவதும் அன்பின் வெளிப்பாடுகள். இவ்வாறு செய்தால் நாம் கடவுளின் மக்களாய் வாழ முடியும் . இறைவனை நம் தந்தையாகவும் தாயாகவும் அனுபவிக்க இயேசு எம்மை அழைக்கிறார்.
ஆனால் கசப்பான அனுபவங்களும் காயம்பட்ட நினைவுகளும் மன்னிப்பதற்கு முட்டுக்கட்டைகளாகி முரண்டு பிடிக்கின்றனவே. மன்னித்தாலும் மறக்க முடியாது தவிக்கின்றோமே. உண்மைதான் எனினும் மன்னிப்பதில் தான் மகிழ்ச்சி உயிர்த்தெழுகிறது. இழைக்கப்பட்ட அநீதியை நினைத்து அல்லல்படுவது எமக்கு நாமே கேடுவிளைவிப்பதாக அமையும் ஆண்டவர் பார்த்துக்கொள்வார் என்று அவரிடம் விட்டுவிடுவதே மன்னிப்பின் முதல் படியாகும் இறை உருவாய் நல்லுறவுகளை வளர்ப்போம். பழிக்குப்பழி அல்ல விழிக்கு விழி அல்ல அன்பு மொழி பேசுவோம்.

யே. சுசீட்சன், கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர்கள் மீது வாள்வெட்டு

யாழ்., பெப். 24
அச்செழுவில் வீடொன்றுக்குள் நேற்றுமுன்தினம் இரவு நுழைந்த சுமார் 20 பேரைக் கொண்ட வன்முறை கும்பல் வீட்டை சேதப்படுத்தியதுடன் இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலையும் நடத்தியுள்ளது. 44 மற்றும் 45 வயதான சகோதரர்களே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.
காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இருவரிடையே ஏற்பட்ட முரண்பாடே வன்முறைக்கான காரணம் என சந்தேகிக்கும் அச்சுவேலி பொலிஸார், சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-23-26)

## பனங்கிழங்குக்கு தெற்கில் கிராக்கி

யாழ்., பெப். 24
யாழ். குடாநாட்டின் பனங்கிழங்குக்கு தென்னிலங்கையில் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.
தற்போது பனங்கிழங்கு சீசன் ஆரம்பமாகியுள்ளது. அதனால் கூடுதலான பனங்கிழங்குகள் சந்தைகளுக்கு எடுத்து வரப்படுகின்றன.
ஒரு பனங்கிழங்கு 10 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.
அதேவேளை, கூடுதலான பனங்கிழங்கு தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படுவதுடன் குடாநாட்டு பனங்கிழங்குக்கு தென்னிலங்கையில் கிராக்கி ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

### பெரும்பான்மை இனத்தவரும்

# துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பம்

**யாழ்ப்பாணம், பெப். 24**
**வவுனியாப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கு பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவர் உட்பட நான்கு பேர் விண்ணப்பித்துள்ளனர் என்று அறியவருகிறது.**

நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியுடன் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கோரல் நிறைவடைந்த வேளையில் வவுனியாப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் இருவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழப் பேராசிரியர் ஒருவரும், ருகுண மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழகங்களில் பணியாற்றிய பெரும்பான்மை இனப் பேராசிரியர் ஒருவருமாக நான்கு பேர் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இன்று 24ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் பேரவையின் பதவிவழிச் செயலாளரான பதிவாளரால் நால்வரது விண்ணப்பங்களும் சமர்ப்பிக்கப்படவுள்ளன.
(ஒ-26)

## மனைவியை தொடர்ந்து கணவனும் சாவு

சாவகச்சேரி, பெப். 24
மனைவியின் பிரிவை தாங்காத கணவனும் உயிரிழந்துள்ளார்.
இந்தச் சம்பவம் மீசாலை வடக்கு வேம்பிராயில் இடம்பெற்றது.
வெற்றிவேல் அரியமணி (வயது - 79) என்ற மூதாட்டி கடந்த 21 ஆம் திகதி உயிரிழந்திருந்தார். இவரது இறுதிக்கிரியைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றிருந்தன. மனைவியின் பிரிவால் கவலையாக இருந்த கணவர் இ.வெற்றிவேல் (வயது - 82) நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். (ஒ-9)

## 'எட்காவை' ஏற்கோம்

### வீரசேகர ஆவேசம்

கொழும்பு, பெப். 24
இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் கைச்சாத்திடப்படவுள்ள 'எட்கா' உடன்படிக்கைக்கு முழு எதிர்ப்பை வெளியிடுகின்றோம் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்தார்.
"பொருளாதார சவாலை எதிர்கொள்ள ஜனாதிபதியால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை மதிக்கின்றோம். ஆனால், இந்திய ரூபா எமது நாட்டில் பயன்பாட்டுக்கு வந்தால் அதற்கு நாம் எதிர்ப்பு. இலங்கை, இந்தியாவின் 29 ஆவது மாநிலமாவதற்கும் நாம் எதிர்ப்பு. விமான நிலையங்களின் அதிகாரம் இந்திய நிறுவனங்களுக்கு வழங்கப்படுவதற்கும் நாம் எதிர்ப்பு. 'எட்கா' உடன்படிக்கையை கைச்சாத்திட முற்பட்டால் அதனையும் நாம் எதிர்ப்போம்" என்றார் வீரசேகர. (ஒ-44)



## யானைகள் அட்டகாசம் வாழ்வாதாரம் துவம்சம்

### விவசாயிகள் குமுறல்

கிளிநொச்சி, பெப். 24
விசுவமடு, நாச்சிக்குடா பகுதியில் யானைகளில் அட்டகாசத்தால் தொடர்ச்சியாக வாழ்வாதாரப் பாதிப்பை எதிர்நோக்க நேரிடுகிறது. உரிய அதிகாரிகளால் இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.
மக்கள் குடியிருப்புகளுக்குள் நுழையும் யானைகள் வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் பயன்தரு மரங்களை அழிக்கின்றன. இதனால் எமது வாழ்வாதாரம் கேள்விக்குறியாகியுள்ளது. அத்துடன் இரவுவேளைகளில் நித்திரையின்றி யானைகளுக்காகக் காவல் காக்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுள்ளது.
இந்தப் பகுதியில் [illegible] வேலி அமைப்பதற்[illegible]கள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்தபோதிலும் மின்வேலி இதுவரை அமைக்கப்படவில்லை. எனவே உரிய அதிகாரிகள் கிராமங்களுக்குள் யானைகள் உள்நுழைவதைக் கட்டுப்படுத்த தற்காலிக பாதுகாப்பு ஏற்பாடாவது மேற்கொள்ளவேண்டும் என்றும் [illegible] (ஒ-13)

## புதினம் தெரியுமோ?

நேற்றைக்கு வீட்டுக்கட்சியின்ர மத்தியகுழுக்காரர், ஆலோசனைக் கூட்டமெண்ட பேரில கிளிநொச்சியில கூடியிருக்கினம். முதலில மத்திய குழுக்கூட்டம் எண்டு தான் அழைப்பு விட்டவை. பிறகு அது நீதிமன்றத்தில் வழக்கு நடக்கேக்க ஏதும் சிக்கலைக் கொண்டந்திடுமோ எண்டிட்டு, ஆலோசனைக் கூட்டம் எண்டு பேரை மாத்தினவை. பேசாமல் மத்தியகுழுக்கூட்டம் எண்டதுக்குப் பதிலா மத்தியானச் சாப்பாட்டுக்குழுக் கூட்டம் எண்டு பேரை வைச்சிருக்கலாம். ஏனெண்டால் மத்தியானச் சாப்பாட்டோட எல்லாரும் கூட்டத்தை முடிச்சுப்போட்டுப் போட்டினம்.

எதுக்கு உந்தக் கூட்டமெண்டு உங்களுக்கு விளங்கியிருக்கும். திருகோணமலையிலையும், யாழ்ப்பாணத்திலையும் வழக்குகள் போடப்பட்டு இருக்கெல்லோ. அதுகளை எப்பிடி எதிர்கொள்ளுறது எண்டதுக்குத்தான். கனநேரம் இழுபறிப்பட்டுத்தான் கடைசியா, 'நிபந்தனை விதிக்காமல் வழக்கை வாபஸ் வாங்கோணும், இல்லாட்டி அதைக் கோர்ட்டில சந்திப்பம்' எண்டு முடிவெடுத்தவை. வழக்குகளைப் போட வைச்ச தரப்பில ஒரு சிலரும் இந்தக் கூட்டத்தில கலந்துகொண்டதால கூச்சல் குழப்பத்துக்கும் குறைவிருக்கேலை.

கூட்டத்துக்கு அம்புலன்ஸில வந்து பெரும் அலப்பறை குடுத்தவர் டாக்குத்தர் சிவமோகன். வவுனியாவில பிரவேட் ஆஸ்பத்திரியில உழைச்ச காசு பத்தாது எண்டு கிளிநொச்சியில ஏதும் இடம் பார்க்க வந்தாரோ தெரியேலை. இல்லாட்டி மகாத்மா காந்தி எண்ட பேரில குவாசியக்கோர் வருத்தம் வந்தமாதிரி உருவத்தில சிலை வைச்ச மாதிரி இஞ்சயும் ஏதும் சிலைவைக்க வந்தாரோ தெரியேலை. கட்சிக் கூட்டத்துக்கு இலங்கையிலேயே அம்புலன்ஸில வந்த முதல் அரசியல்வாதி சிலைமோகனாத்தான் இருக்கும். வந்தவர் சும்மா இருக்கேலை. தான் எந்தத் தரப்பு எண்டதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தார். எல்லாத்துக்கும் குறுக்க விதண்டாவாதம் கதைக்கிறதும், வழக்குப் போட்ட ஆக்களுக்கு வக்காலத்து வாங்கிறதுமா இருந்தார். ஒருகட்டத்தில வழக்காடுறது ஆரெண்டு அறிவிச்சவை. உடன எங்கட டாக்குத்தருக்கு கோபம் வந்திட்டுது. 'அதென்னெண்டு இவைதான் வழக்குப் பேசோணும் எண்டு எங்களைக் கேக்காமல் முடிவெடுப்பியள்?' எண்டு பாயத் தொடங்கிட்டார். ஒருவேளை அப்பிடி ஆரெல்லாம் வழக்குப் பேச வரப்போயினம் எண்டு அம்புலன்ஸில வந்த டாக்குத்தரிட்ட கேட்டிருந்த அடுத்த நிமிசமே, சொல்லவேண்டிய ஆக்களிட்ட சொல்லி, அந்த லோயர்மாரையும் வழக்காட விடாமல் ஏதும் அலுவல் பாத்திருப்பினம்.

கூட்டத்துக்கு வந்த இன்னொரு முக்கியமான ஆள் பீற்றர் இளஞ்செழியன் தான். ஏனெண்டால் வழக்குப் போட்டதில இவரும் ஒராள். இவரை வழக்குப் போட வைச்சவை கூட்டத்துக்கு வராமல் ஒளிச்சுப் பிடிச்சு விளையாடினாலும், பீற்றர் இளஞ்செழியன் வந்ததைப் பாராட்டத்தான் வேணும். எண்டாலும் கூட்டம் நடந்தது, கிளிநொச்சியில இருக்கிற சிறீதரன்ர ஒப்பீஸில. 'வழக்குப் போட்ட கோபத்தில சாப்பாட்டுக்க நஞ்சைக் கிஞ்சைப் போடேலத்தானே?' எண்டு கேட்டிட்டு பயத்திலை ஆள் சாப்பிடாம மாறிட்டாம். நேற்றையான் கூட்டத்தோட வழக்குப்போட்ட தரப்பில இருந்த கொஞ்சப்பேர், மற்றப்பக்கம் சாய்ஞ்சிட்டினமாம். அவை உள்வீட்டுத் தகவல் ஒண்டையும் ஆதாரத்தோட கட்சிக் காரரிட்ட சொல்லியிருக்கினமாம்.

யாழ்ப்பாணத்தில வழக்குப் போடுறதுக்காக பொதுச் சபையிலவேற ஆளைத்தான் முதல்யோசிச்சவையாம். அந்த ஆள்வீட்ட ஒரு கும்பலா போய் வழக்குப்போட ஆலோசனையும் செய்தவையாம். அவையின்ர லிஸ்ட்டும் கட்சி மேலிடத்துக்கு குடுபட்டிருக்காம். நேரம் வரேக்க அவையைக் கவனிப்பம் எண்டு கட்சிக்காரர் முடிவெடுத்திருக்கினமாம்.

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த விலையில் அபான்ஸிடமிருந்து உலகின் தலைசிறந்த சோலர் பிராண்டுகள்




நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் மின்பட்டியல் விலை அதிகரிப்பு தொல்லைகளில் இருந்து விடுபடுவதற்கும், அதன் தீர்வாகவும் சுற்றுச்சூழல் நட்புறவுமிக்க சோலர் அமைப்புகளை மிகவும் குறைந்த விலைகளில் அபான்ஸ் வழங்கி வருகிறது.

Huawie, LG, Solis மற்றும் Jikno போன்ற விசேட விற்பனை நாமங்களுக்குச் சொந்தமான உலகின் முன்னணித் தரத்தில் உயர்ந்த சோலர் அமைப்புகளை அபான்ஸ் இடமிருந்து உங்களுக்குப் பெற்றுக்கொள்ள முடியும். உங்கள் வீடுகள், வியாபார ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள் போன்றவற்றின் தேவைகளுக்குப் பயன்படுத்தும் சோலர் அமைப்புகளை உங்கள் தேவைகளுக்கு ஏற்ப Abans இடமிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

இதன் அடிப்படையில், அபான்ஸ்வழங்கும் Signle Phase 5kW சோலர் அமைப்பு ஒன்றை ரூ. 999,000/= இலிருந்து விற்பனைச் சந்தையின் மிகவும் குறைந்த விலையில் உங்களுக்குப் பெற்றுக்கொள்ளமுடியும். இந்தச் சிறப்புச் சலுகைகள் 2024 பெப்ரவரி 29ஆம் திகதிவரை செல்லுபடியாகும்.

அபான்ஸ் இடமிருந்து நம்பிக்கையோடு சோலர் அமைப்புகளை கொள்வனவு செய்யும் உங்களுக்குப் பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதன் அடிப்படையில் முதல் 3 வருடங்களில் ஒரு சேவை இலவசமாக வழங்கப்படும். அத்தோடு இதன் பேனல் செயற்பாடுகளுக்கு 25 வருடகால உத்தரவாதம் வழங்கப்படுகிறது.

சோலர் அமைப்புகளைப் பொருத்தும் காலப்பகுதியில் எதிர்கொள்ள நேரிடும் சகல அபாயங்களுக்கும் காப்புறுதி வழங்கப்படுவதோடு, முதல் வருடத்தின் இயற்கைப் பேரிடர்கள், தீ மற்றும் திருட்டுச் சம்பவங்களுக்கு காப்புறுதி பொருந்தும்.

அபான்ஸ் சோலர் அமைப்புகளைப் பொருத்தும் பணியில் சிறந்த பயிற்சியுடன், அனுபவம் நிறைந்த ஊழியர்கள் பொறியியலாளர் ஒருவரின் மேற்பார்வையில் பொருத்தும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு 50 வருடங்களுக்கும் மேலாக வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள அனுபவம் வாய்ந்த புகழ்பெற்ற நிறுவனமான அபான்ஸ் நிறுவனத்தின் மூலம் வழங்கபடுவதனால் சோலர் அமைப்புகளின் நீடித்த உத்தரவாதம் உறுதிசெய்யப்படுகிறது. சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் எரிசக்தி நெருக்கடி ஆகியவை இன்றைய உலகம் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினைகளாகக் கருதப்படுகின்றன, மேலும் இந்த உலகளாவிய சவாலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு இயற்கை வளமான சூரியஒளி உகந்ததாகப் பயன்படுத்தப்படுகிறது. இலங்கை போன்ற வருடத்தில் 365நாள்களும்சூரியஒளிமிகவும்சிறந்த முறையில் கிடைக்கும் நாட்டில் இதுவே மிகவும் பொருத்தமான ஒரு தீர்வாகும். 50 வருடங்களுக்கும் மேலாக வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் அபான்ஸ் நிறுவனம் இவ்வாறான முதலீட்டை மேற்கொள்ளும்போது நம்பிக்கை வைக்கக்கூடிய ஒரு நிறுவனமாகும். மேலதிக விவரங்களுக்கு 011 210 8108 துரித இலக்கத்துக்கு அழையுங்கள். அல்லது www.abanssolar.lk இணைய முகவரிக்கு பிரவேசியுங்கள்.

## மாற்றுத்திறனாளிகளிடையே விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், பெப்.24

மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்கத்தின் 34 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கிடையே கலை,கலாசார, விளையாட்டுப் போட்டிகளை முன்னெடுக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் மருத்துவர் சிவபாதமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்திலுள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளும் இந்தப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்கமுடியும்.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் போட்டிக்கான விண்ணப்பங்களை 'arodinjaffna@gmail.com' எனும் மின்னஞ்சல் ஊடாகவும், 47/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாற்றுத்திறனாளிகள் புனர்வாழ்வுச் சங்கத்தின் அலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக் கொள்ளமுடியும்.

மேலும் மார்ச் 3 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமெனவும் மேலதிக தகவல்களைப் பெறுவதற்கு 0212215925 , 0776681798 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ப-125)

## மண்டபத் திறப்புவிழா

கொக்குவில், பெப்.24

கொக்குவில் சனசமூக நிலையத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு பவளவிழாவை முன்னிட்டு, சனசமூக நிலையத்தின் நுழைவாயில் முன் புதிதாக அமைக்கப்பட்ட மண்டபத்தின் திறப்பு விழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிலையத் தலைவர் செ.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மண்டபத்தைத் திறந்து வைக்கவுள்ளார். (ப-66)

## கால்கோள்விழா

யாழ்ப்பாணம், ஊரெழு வித்தியாசாலை தரம் - 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊரெழு அபிவிருத்திச் சங்கப் பழைய மாணவர் குமணன் குகநாதன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலாசகர் க.சோதிதாசன், பழைய மாணவர் திருமதி சகுந்தலாதேவி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)

## விளையாட்டுப் போட்டி

பருத்தித்துறை, பெப்.24

ஹாட்லிக் கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான இல்ல மெய்வல்லுநர் போட்டி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் தம்பையா கலைச்செல்வன் தலைமையில் இன்று சனிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-100)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். தாயாரின் உடல் நிலை சீராகும். கல்யாணப் பேச்சு சாதகமாக முடியும். மகிழ்ச்சியான நாள். திடீர்ச் செலவுகளும் ஏற்படும். முருகப் பெருமானை வழிபடுவதன் மூலம் நற்பலன்கள் கூடுதலாகும்.

**இடபம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பொதுக்காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமற்போன முக்கியமான ஆவணம் ஒன்று கிடைக்கும். புது யுக்திகளை கையாள்வீர்கள்.

**மிதுனம்:** வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துகொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பீர்கள்.

**கடகம்:** எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒருவேலை முடியும். பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள். கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும்.

**சிம்மம்:** குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்புக் கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள். இழப்புகளைச் சரி செய்வீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் புதுத் தொடர்பு கிடைக்கும். உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**துலாம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். மற்றவர்களிடம் வீண் கோபத்தைத் தவிர்க்கவும். கடினமாக உழைத்து இலாபம் ஈட்டுவீர்கள்.

**விருச்சிகம் :** குடும்பத்தில் சின்னச் சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அலைச்சல் உண்டு. திடீர் பயணங்கள் இருக்கும். தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**தனுசு:** குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். பழைய கடன் பிரச்சினை கட்டுப்பாட்டுக்குள் வரும். முயற்சிகள் பலிதமாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். சிறப்பான நாள்.

**மகரம்:** உங்கள் செயலில் வேகம் கூடும். உறவினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தைப் பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்:** பணப்புழக்கம் கணிசமாக உயரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள் வீடு தேடி வருவார்கள். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் புதுப் பொறுப்புகள் தேடிவரும்.

**மீனம்:** சிக்கனமாக இருக்கவேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# யதார்த்தத்தைப் புரிந்துகொள்வோம்

கொஞ்சக் காலத்துக்கு முன்னர் வரை, அழுத்தம் திருத்தமாகவும் உரத்தும் சொல்லப்பட்டுக்கொண்டிருந்த இலங்கையில் நடந்த போரில் இடம்பெற்ற அக்கிரமங்களுக்கு பொறுப்புக்கூறல் என்ற விவகாரம் மெல்ல அமிழத் தொடங்கியிருக்கின்றது. பௌத்த – சிங்களப் பேரினவாதத்தினது பெருவிருப்பமும் அதுவே.எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 55 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்னர் வரையில் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் என்றால் தமிழ் மக்கள் மத்தியில் பரபரப்பு ஏற்படுத்தப்படும். தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளாக தம்மை அடையாளப்படுத்துவோரும், தமிழ்த்தேசியச் செயற்பாட்டாளர்கள் என்று தம்மைச் சித்திரிப்போரும் ஜெனிவாவை நோக்கிப் படையெடுக்கத் தொடங்குவர். இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்டுவிட்டால், பொறுப்புக்கூறல் விவகாரத்தில் எல்லாம் கிடைத்ததைப்போன்று தமிழ் மக்களைத் திருப்திப்படுத்திவிடுவார்கள் இந்தத் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள்.இறுதிக்கட்டப்போரின் போதான பொறுப்புக்கூறல் விவகாரம் எப்போது ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் மட்டுப்படுத்தப்பட்டதோ அப்போதே தமிழ் மக்களின் நீதிக்கான எதிர்பார்ப்பு நீர்த்துப்போகச் செய்யப்பட்டது. ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையொன்றும், நாடுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரமன்றம் அல்ல. வெறுமனே இலங்கைக்கு ஆலோசனையையும் அழுத்தத்தையும் பிரயோகிக்கும் தளம் மாத்திரமே. ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையிலுள்ள நாடுகள் தத்தமது பூகோள நலன்களின் அடிப்படையில் மாத்திரம் சில தனிப்பட்ட நகர்வுகளை மேற்கொள்ள முடியும். அதற்கு அமைவாக இலங்கையின் முன்னாள் ஆட்சியாளர்கள், இராணுவத் தளபதிகளுக்கு சில நாடுகள் தமது நாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு தடைவிதித்திருக்கின்றன. ஆனால், தமிழ்மக்களுக்கு எந்தவொரு தீர்வும் கிடைக்கவில்லை என்பதுடன், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியும் கிடைக்கவில்லை.

1980ஆம் ஆண்டுகளில் இந்தியா எவ்வாறு இலங்கையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக தமிழ் ஆயுதக் குழுக்களைக் கையாண்டு ஆயுத உதவிகளை வழங்கியதோ, அதேபோன்று மேற்குலகம் இலங்கையைத் தனது காலடியில் கிடக்கச் செய்வதற்காக மனிதஉரிமைகள் பேரவையில் தீர்மானங்களை அடுக்கடுக்காக நிறைவேற்றியது. முன்னாள் ஆட்சியாளர் கோத்தாபயவும் சரி இப்போதைய ஆட்சியாளர்களும் சரி 'ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தமாட்டோம், அதிலிருந்து விலகிவிட்டோம்' என்று சொன்ன பின்னரும் கூட இலங்கையை எந்தவொரு தரப்புகளாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச்செல்வதுதான் ஒரேவழி என்ற போதும், அந்த வழிக்கான பாதைகளைத் தேடுவதை விடுத்து அது சாத்தியமில்லை என்பதை தேய்ந்துபோன 'ரெக்கோர்டர்' போன்று திரும்பத்திரும்ப ஒப்புவித்ததைத் தவிர தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் குறிப்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர்–குறிப்பாக அந்தக்கூட்டுக்குள் இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியினர் –ஒன்றும் செய்யவில்லை.ஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணையை –சர்வதேச விசாரணை என்று அடையாளப்படுத்தி சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்று அதிமேதாவித்தனமாக கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் இரா.சம்பந்தனும், அந்தக் கட்சியின் இந்த விவகாரங்களைக் கையாண்ட எம்.ஏ.சுமந்திரனும் கூறினர். சர்வதேச விசாரணை என்றால் என்ன என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டு, இலங்கையைப் பொறுப்புக் கூறச் செய்வதற்கு ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவை ஒரு தளமல்ல என்பதையும் தெரிந்துகொண்டு அதற்குள் முடக்கச்செய்தனர்.

இனியாவது அவற்றைப் புரிந்துகொண்டு இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு தமிழ்த் தரப்புகள் ஓரணியில் நகர்த்தவேண்டும்.-



# கடன் மறுசீரமைப்பின் பின்னரும் கடன் சுமையால் சிக்கல் இருக்கும்

**கொழும்பு, பெப். 24**

**கடன் நிலைத்தன்மை பகுப்பாய்வின் இலக்குகளுக்கமைய கடன் மறுசீரமைப்பின் பின்னரும் இலங்கை கடன் சுமையால் சிரமங்களை எதிர்கொள்ளும் என்று உலகளாவிய இறையாண்மை கடன் ஆராய்ச்சியாளர் தியோா மெரிட் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்–

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பு இலக்குகள் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையால் வலுவான வருவாய்த் தளத்துடன் தாங்கிக்கொள்ளக்கூடிய கடனை விட அதிகமான கடனைத்தக்க வைத்துக்கொள்ள முடியும். இதற்கு கடந்த காலங்களில் இலங்கை நடுத்தர வருமானம் பெறும் நாடாக இருந்தமையே பிரதான காரணமாகும்.

இந்நிலையில் 2022 ஆம் ஆண்டில் இலங்கை குறைந்த வருமானம் பெறும் நாடாக தரமிறக்கப்பட்டது.

அந்தவகையில் கடன் மறுசீரமைப்பின் பின்னர் இலங்கையின் கடன் சுமை மற்றும் மீள்நிதியளிப்பு அபாயம் போன்றவற்றை உரிய முறையில் கையாள்வதற்கு இலங்கை நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும்– என்றார். (ச–இ)

# பொதுத் தேர்தலை முதலில் நடத்துங்கள்

ரணிலிடம் மொட்டுக் கட்சி உறுப்பினர் கோரிக்கை

கொழும்பு, பெப். 24

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.சந்திரசேன.

"ஜனாதிபதித் தேர்தல் நடந்தாலும், பொதுத்தேர்தல் நடந்தாலும் எதிர்கொள்வதற்கு நாம் தயார். பஸில் ராஜபக்ச இம்மாதம் நாட்டுக்கு வருவார். அவர்போல் அரசியல் வியூகம் வகுத்துச் செயற்படக்கூடிய தலைவர் கிடையாது. பஸில் வந்ததும் தேர்தல் பற்றி முடிவெடுக்கப்படும்" - என்றார். (ஒ–44)

# இந்தியாவின் பிராந்தியமல்ல

கொழும்பு, பெப். 24

இலங்கையானது இந்தியாவின் பிராந்தியம் என அமைச்சர் கருத்து வெளியிட்டிருந்தால் சுதந்திரக்கட்சி அதனை வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அந்தக் கட்சியின் பதில் பொதுச்செயலரான துஷ்மந்த மித்ர பால தெரிவித்தார்.

அமைச்சர் (ஹரின் பெர்ணான்டோ) எந்த நோக்கில் அந்தக் கருத்தை வெளியிட்டார் எனத் தெரியவில்லை. இலங்கையென்பது இந்தியாவின் பிராந்தியம் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ–44)

## 92 இலட்சம் மக்களுக்கு கடவுச்சீட்டு

இலங்கையின் சனத்தொகையில் 40 வீதமானோருக்கு கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கிட்டத்தட்ட 92 இலட்சம் பேர் கடவுச்சீட்டைப் பெற்றுள்ளனர். (ச–இ)

# எந்தத் தேர்தலையாவது நடத்தி அக்கறையை நிரூபியுங்கள்!

*ரணிலுக்குச் சவால்*

இந்நாடு மீதும், நாட்டு மக்கள் மீதும் ஜனாதிபதிக்கு உண்மையான அக்கறை இருந்தால் அவர் உடன் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

மக்கள் ஆணையுள்ள அரசொன்றே நாட்டை ஆள வேண்டும். அதுவே ஏற்புடைய நடவடிக்கை. எனவே, ஜனாதிபதி உடன் தேர்தலுக்கு செல்ல வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டால் கூட அதனையும் எதிர்கொள்வதற்கு நாம் தயார் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஒ–44)

## நாளை

25.02.2024

**ஞாயிற்றுக்கிழமை**

**மாசி–13**

சுபநேரம் : 09.29 – 10.59

ராகுகாலம் : 04.59 – 06.29

## நாளொரு நல்வார்த்தை

**"இன்பம் என்றால் என்னவென்றே பலருக்கும் தெரியாது. அது பொன்னால் கிடைப்பதல்ல, புகழால் கிடைப்பதல்ல. தன்னை அறிதலில் ஓர் இன்பம் இருக்கிறது பாருங்கள். அந்த இன்பமே உயர்வானது."**

**– ஜெயகாந்தன் –**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் நல்வாழ்வு விரைவில் புதிய சட்டம்!

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, பெப். 24

குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்வதற்காக தற்போதுள்ள சட்ட விதிகளுக்கு மேலதிகமாக விரிவான சட்டத்தை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சமூகத்தில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்களால், குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. நாட்டில் சிறுவர்கள் பல்வேறு துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுவதும், பல்வேறு துஷ்பிரயோக நடவடிக்கைகளில் ஈடுபடுவதும், அவர்களின் உரிமைகளை அனுபவிக்கும் வாய்ப்புகள் பறிக்கப்படுவதும் எனப் பல செய்திகள் வெளியாகி வருகின்றன. இந்நிலையில் குழந்தைகளின் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் முகமாக ஒரு விரிவான சட்டத்தை உருவாக்குவதற்கான முன்மொழிவை சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்துள்ளார். (ச-இ)


## மணிவிழா வாழ்த்துக்கள்




### செல்வி வாரித்தம்பி கமலேஸ்வரி

(பயிற்றப்பட்ட கணித ஆசிரியர் - கல்விமாணி)

• சேவைக்காலம் - 22.03.1990 - 24.02.2024

• எமது பாடசாலையில் - 15.11.2021 - 24.02.2024

வாழ்த்துவோர்:

ஓய்வு காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துவோர்,
நலன்புரி சங்கம்
யா/ அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம், மீசாலை.


## மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 02 . 1939

மறைவு 22 . 02 . 2024

### குலசிங்கம் அன்னபூபதி

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட குலசிங்கம் அன்னபூபதி கடந்த (22.02.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற குலசிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நல்லையா, இராசரத்தினம், மகேஸ்வரி, பவளரத்தினம் மற்றும் பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருபாலினி, சித்திராயினி ஆகியோரின் அன்புத் தாயும், காந்தன், இந்திரசேகரன் ஆகியோரின் பாசமிகு மாமியும், தனுஷன், விஷ்ணு, சொர்ணநிதி, சபீசன், சாருகா, சாயித்தியன், நிதுஜா, ஆதித்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கியானின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
075 041 3501 (இலங்கை),
0041 754 216 772 (சுவிஸ்)

தாவடி கிழக்கு,
தாவடி.

(CS 27748) S-1

## மரண அறிவித்தல்



மலர்வு 24 . 05 . 1941

உதிர்வு 22 . 02 . 2024

### திருமதி சிங்கராசா லோகேஸ்வரி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டு மற்றும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிங்கராசா லோகேஸ்வரி அவர்கள் நேற்றுமுன்தினம் (22.02.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிங்கராசா அவர்களின் பாசமிகு மனைவியும், தனராசன், வசந்தி, குணபாலன், ஸ்ரீதரன் (Italy), பாஸ்கரன் (Bus உரிமையாளர் கொடிகாமம் - யாழ்ப்பாணம்), பவானி, பார்த்தீபன் (Assistant Director, Provincial Department of Edu. Eastern Province, Trincomalee), பிரதீபன் (Animal Production and Health Department) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவளேஸ்வரி (கண்டி), கேசரிலோகன், போதிநாதன் (Canada), கமலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாசுகி, காலஞ்சென்ற சூரியகுலேந்திரன் மற்றும் மலர்விழி, புஸ்பலதா (Italy), செந்தமிழ்ச் செல்வி, ஈஸ்வரன், சிவசத்தியா, சுகந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், லோசனா, அனுசியா, ஜேம்சன், சிந்துஜா, ஜக்சன், டினோஜா, அகீத்தா (Canada), அகீனன் (Cluster Manager Softlogic, Jaffna), தர்ஷிகா, சௌமியா, கௌஷிகா, கீர்த்தனன் (ஆசிரியர்), தமிழினி (ஆசிரியை-Aston International School), சுபவாணி, லக்ஸ்மன், லஷ்மி, ஜஸ்மிதா, சஸ்விதா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், முகின்நிலா, தேனுஜா, தனோசியன், திகழினி, அபிஸ்னன், பவிசா, மதுர்சா, உமேஷ், விமர்ஷா, தனுஷ், பவினிஹா, அபினவ், வர்சிகன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 18 . 04 . 1946

மறைவு 21 . 02 . 2024

### செல்வதி மங்களநாயகம்

ஊர்காவற்றுறை, கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வதி மங்களநாயகம் கடந்த (21.02.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் ஆன்றோஸ் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை மற்றும் வஸ்தியானாப்பிள்ளை (முத்து) தம்பதிகளின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற ஜோண் அன்ரன் மங்களநாயகத்தின் அன்பு மனைவியும், ஜோய் நியுமன் (பிரான்ஸ்), ஜூலியஸ் றிச்மன் (Tax Accountant, அவுஸ்திரேலியா), பெலிசியன் லக்ஸ்மன் (கனடா), ஜெறேன் பபிலா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், ரேக்கா ஜனனி (பிரான்ஸ்), Dr.லியூரின் றிச்மன் (சந்தாம்பிள்ளை - Dentist, அவுஸ்திரேலியா), சுகன்யா (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற மாசில்லா சேவியர் அவர்களின் அன்பு மைத்துனியும், மரியநாயகம், இம்மானுவேல் (தாசன் - இத்தாலி), கிளாரா (கனடா), புஸ்பா (பிரான்ஸ்), காலஞ்சென்ற குணநாயகம் (ஜேர்மனி), சாந்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், மகேஸ்வரி (நீர்கொழும்பு), செல்வி (இத்தாலி), மங்களம் (கனடா), லேற்ரன் (பிரான்ஸ்), சுபோதினி (ஜேர்மனி), செந்தில்நாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், அலிசியா, அஸ்வின், லேடன், டிலான் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 - 09.30 மணி வரை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள White House மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, முற்பகல் 10.00 மணிக்கு கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்திற்கு இறுதிச் சடங்குக்காக எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் கரம்பொன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
நியுமன் 0033 603 000 180
றிச்மன் 0061 433 953 623
லக்ஸ்மன் 0016 478 311 335

(CS 27999) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மஹோற்சவம்**

யாழ்., பெப். 24

யாழ்ப்பாணம், வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளது. உற்சவத்தில் மார்ச் மாதம் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என்றும் ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

(ச)

## மரண அறிவித்தல்



**அருட்சகோதரி மேரி பொலினா சந்தனம் தி.கு**

பொகவந்தலாவையைப் பிறப்பிடமாகவும், யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி மேரி பொலினா சந்தனம் தி.கு நேற்று (23.02.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் இணைந்து விட்டார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இன்று (24.02.2024) சனிக்கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு இளவாலை திருக்குடும்பக் கன்னியர் சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், இளவாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.


**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
**மாகாணத் தலைவி,**
**121, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CS 27992) S-1

**EDLOCATE'S STUDY ABROAD DAY IN JAFFNA**

வெளிநாட்டுக்கல்விக்கான உங்கள் இலக்கினை எம்முடன் இணைந்து வெற்றியாக்கிக் கொள்ளுங்கள்.

2ND MARCH 9.00AM 2.00PM | UNIVERSITY OF JAFFNA PREMISES | ENTRANCE FREE




- Post study work rights after completion of studies.*
- PR pathway opportunities.*
- Enrol in over 100 plus Universities/Colleges in 07 Countries.

முற்றிலும் இலவசமான கலந்துரையாடல்

DIPLOMA | DEGREE | MASTERS

UNIVERSITY PLACEMENT TO VISA IS FREE OF PROFESSIONAL FEE

edlocate
Reach Light Beyond Borders
www.edlocate.lk

Pre-register by calling Priyanthy:
077 222 3178

**DISH ANTENNA TECHNICIANS தேவை**

கொழும்பில் இயங்கி வரும் SATTELITE மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை மற்றும் சர்வீஸ் செய்யும் கடைக்கு டிஷ் ஆன்டென்னா பிட்டிங் செய்யக் கூடிய மற்றும் ELECTRONICS TECHNICIANS தேவை. தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய இருவர் தேவை. உணவு தங்குமிடம் மற்றும் திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகள் கிடைக்கும். உடன் தொடர்புகொள்ளவும்

(cs.54088) (N-1)

தொடர்பு: 077 771 0785

**வீடு, காணி விற்பனைக்கு**


யாழ். சுண்டுக்குழியில் நவீன வசதிகள் கொண்ட புதிய, முற்றிலும் குளிரூட்டப்பட்ட (AC) மாடி வீடும், வடமராட்சி, நெல்லியடி நகரப்பகுதியில் மிகவும் சிறந்த நல்ல சூழலில் ஒன்றே முக்கால் பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு.

(CS54097) J-1

தொடர்பு:- 070 689 2666

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27 . 08 . 1959 | 07 . 03 . 2023 |



**அமரர்**


## சின்னத்துரை வரதராசா

ஆண்டொன்று கடந்துவிட்டோம்,
இன்னும் ஆறவில்லை எம் துயரம்,
மீண்டு வரமுடியா உந்தன் பயணமதில்,
நாம் மீளாத்துயர் கொண்டோம்.
உந்தன் முகம் காணாது தினம் தினம் வருந்துகின்றோம்,
என்றும் உங்கள் நினைவுகளால் எம் நிழலாக நீங்களிருக்க
இறைவனை வேண்டி உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

**நீர்வேலி வடக்கு**
**நீர்வேலி** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17 . 12 . 1962 | 22 . 02 . 2024 |



**அமரர் சோமசுந்தரம் பிரபாகரன் (கரன்)**

நயினாதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பிரபாகரன் அவர்கள் 22.02.2024 வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-தங்கமுத்து தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், சாந்தினியின் அன்புக் கணவரும், கம்சானந்தியின் பாசமிகு தந்தையும், கனகம்மா, கதிரவேலு, கனகேஸ்வரி, காலஞ்சென்ற சிவனடியான் ஆகியோரின் சகோதரரும், நாகலட்சுமி, ஸ்ரீஸ்கந்தராசா, யோகம்மா, சந்திரசேகரம் காலஞ்சென்ற மதியாபரணம் மற்றும் கணேசரெத்தினம், கமலாம்பிகை, கலாநிதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஜெயபாலன், மற்றும் சிதம்பரநடராசா, சதாரூபி, ஜெயராணி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.02.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**074 063 1098, 076 536 4026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் : 05.04.1958 விண்ணில் : 16.02.2022

அமரர்

## அன்பழகி இராசேந்திரம்

அன்பின் இலக்கணமாய் அறிவின் விருட்சமான
எம் அம்மாவே !
பற்றும் பாசமும் மீதுரப் பெற்று வாழ்ந்தீர்
ஆறுதல் பல கூறி அரவணைத்த
எம் அம்மாவே !
ஈராண்டு கடந்தது என்று நினைக்கையில்
ஈரவிழி காயவில்லை நினைவுகள் மறையவில்லை.


என்றும் அம்மாவின் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

129, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(cs.54102) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 01 . 04 . 1953



மறைவு 18 . 01 . 2023

### தர்மலிங்கம் சிவகுமாரன்

(இளைப்பாறிய ஆசிரியர் - இராசு வாத்தியார்)
திதி: அபரபட்ச துவாதசி


ஓராண்டு கடந்து போனாலும்
ஒரு யுகமே ஓடி முடிந்தாலும்
ஓயவில்லை கண்கள் மட்டும்
ஒவ்வொரு நாளும் நீர் சொரிந்து
ஆலமரம் சாய்ந்தாலும் அடிவிழுது
தழைத் தோங்கும் போல்
அப்பா நீ பிரிந்தாலும் உன்விழுதாய்
நாம் வளர்வோம்
உருவமாய் காத்த நீ அருவமாய்க் காப்பாய் என
ஆண்டவன் கழல் கூட ஓராண்டு
தவிர்த்து இருந்தோம்.
உந்தன் நிழல் தனில் எப்போதும் நாம்
வளர்வோம் பெரும் துணையாய்.

குமரஸ்தான்,
செட்டிவளவு,
இணுவில் மேற்கு, இணுவில்.

(CS/27991) J-1

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம் 19.12.1941

மறைவு 23.02.2024

## சதாசிவம் வெற்றிவேலு

### (ஐயம்பிள்ளை)

மீசாலை வடக்கு, மீசாலையை பிறப்பிடமாகவும், வேம்பிராய்ச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் வெற்றிவேலு (ஐயம்பிள்ளை) நேற்று (23.02.2024) வெள்ளிக்கிழமை அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-கதிராசிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வெற்றிவேலு அரியபூமணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, காசிப்பிள்ளை, திலகவதி மற்றும் குமாரசாமி, காலஞ்சென்ற கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இந்திரவதனி, ஜெயஸ்ரீ, ஜெயகுமார் (இத்தாலி), சிவகுமார் (சுவிஸ்), உதயகுமார் (லண்டன்), விஜயகுமார் (லண்டன்), விஷயகுமாரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், மார்க்கண்டு, மோகனதாசன், தெசீர் (இத்தாலி),யோகமலர் (சுவிஸ்), குனேந்திரா (லண்டன்), சுதாஜினி (லண்டன்), சந்திரலிங்கம் (மாதகல்) (Srilanka Telecom Staff) ஆகியோரின் அன்பு மாமனாரும், மாதீஸ் (பிரான்ஸ்), அனுஜன் (இந்தியா), கோபிதா (முல்லைத்தீவு வள்ளிபுர மகா வித்தியாலயம்), ஆனந்தகுமார் மாலதி (லண்டன்), தினேஷ்(பிரான்ஸ்), மகிந்தன் பிரியங்கா, நிதர்ஷன் (கனடா), யாதவன் (பிரான்ஸ்), ஆந்திரேயா (இத்தாலி), சினுசன் கிறிஸ்டினா (சுவிஸ்), சினுசியா (சுவிஸ்), நிரோசன் மகிஷா (லண்டன்), யதுசன் (லண்டன்), கஜனுஜன் (லண்டன்), துர்க்கா (லண்டன்), கஜினி (லண்டன்), கஜேந்திரகுமார் பகிஷா (அமெரிக்கா), யானுராஜ் சாளினி (பிரான்ஸ்), சதுஷா, அபிநயா ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.02.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வேம்பிராய்ச்சந்தியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் சந்தி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை வடக்கு ,
மீசாலை,
வேம்பிராய்ச்சந்தி.

(cs.2790) (N.1)

குடும்பத்தினர்
0772269885
0770755760

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணிக்கச்சேரி நடக்காமையால் புதுக்குடியிருப்பில் மக்கள் சிரமம்

முல்லைத்தீவு, பெப். 24

**புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மக்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் இன்னும் வழங்காத நிலையில் மக்கள் அரச சேவைகளை பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.**

மக்களின் சொந்தக் காணிகளில் பிள்ளைகளுக்குப் பிரித்து வழங்கப்பட்ட காணிகள் மற்றும் பெற்றோர் இறப்பின் பின்னர் காணிக்கு உரித்தானவர்களுக்கு வழங்கும் காணிகள், காணிப் பிணக்கில் உள்ள காணிகள் போன்ற பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. அத்துடன் இன்னும் பல குடும்பங்களுக்கான காணி அனுமதிப்பத்திரங்கள் மாற்றம் செய்யப்பட்டு வழங்கப்படாத நிலை காணப்படுகின்றன. கடந்த 3 ஆண்டுகளாகக் காணிக் கச்சேரி அங்கு நடத்தப்படவில்லை என்று மக்கள் கூறுகின்றனர். காணிக்கான அனுமதிப்பத்திரம் கிடைக்காமையால் பல ஆண்டுகளாக மின்சார இணைப்பு, விவசாயக் கடன் என்பவற்றை பெற்றுக் கொள்ளமுடியாத நிலை காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (ஒ-19)

## விபத்துக்கான மரக்கிளை அகற்றப்படவில்லை

முல்லைத்தீவு, பெப். 24

தேவிபுரத்தில் உயிரிழப்பை ஏற்படுத்திய மரக்கிளை இன்னமும் அகற்றப்படவில்லை.

கடந்த 17ஆம் திகதி தேவிபுரத்தில் வீதியில் தொங்கிக் கொண்டிருந்த ஆலமரக் கிளையுடன் மோதுண்டு ஒருவர் உயிரிழந்தார். மரங்களை வெட்டக்கூடாது என்ற அறிவுறுத்தலால் கிராம மக்கள் அதை வெட்டாது புதுக்குடியிருப்புப் பிரதேசசபைக்கு தகவலை வழங்கியுள்ளனர். ஒரு வாரமாகியும் மரக்கிளை இன்னமும் அகற்றப்படவில்லை. (ஒ-13)



## நயினாதீவு அம்பாளுக்கு மண்டலாபிஷேகம் மார்ச்சில்

யாழ்ப்பாணம், பெப். 24

64 சக்திபீடங்களின் ஒன்றான வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மண்டலாபிஷேக நிறைவு உற்சவம் எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ளது. ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் கடந்த மாதம் 24 ஆம் திகதி இடம்பெற்றது. மறுநாள் மண்டலாபிஷேக உற்சவம் ஆரம்பமாகி தற்போது சிறப்பாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-27)

## வெண் கிரவல் பயன்பாடு வீதிகளுக்கு ஆயுள் குறைவு



கிளிநொச்சி, பெப். 24

கிளிநொச்சி மாவட்டத்தில் சிவப்பு கிரவலுக்குப் பதிலாக வெண்கிரவல் மண்ணைப் பயன்படுத்தி புனரமைக்கப்படும் வீதிகள் குறுகிய காலத்துக்குள்ளேயே சேதமடையத் தொடங்குகின்றன என்று பொது அமைப்புகள் சுட்டிக்காட்டி யுள்ளன.

கடந்த காலங்களில் அக்கராயன் மருத்துவமனையிலிருந்து ஸ்கந்தபுரம் கரும்புத் தோட்டம் வரை புனரமைக்கப்பட்ட அணைக்கட்டு வீதி, கோணாவிலிலிருந்து அக்கராயன் பிள்ளையார் கோவில் வரை புனரமைக்கப்பட்ட வீதிகள் தற்போது மிக மோசமாகச் சேதமடைந்துள்ளன.

சிவப்புக் கிரவலுக்குப் பதிலாக வெண் கிரவல் மண்ணைப் பயன்படுத்தியமையே இதற்குக் காரணமாகும்.

மாவட்டத்தின் சிவப்பு கிரவல் அகழப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படும் நிலையில் தரம் குறைந்த வெண் கிரவலே எமது மாவட்டத்தின் வீதி புனரமைப்புகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இதனைத் தடுப்பதற்கு கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் பொது அமைப்புகள் சுட்டிக்காட்டின. (ச-13)

## முற்றவெளியில் பொலித்தீன் அகற்றல்

யாழ்.முற்றவெளிப் பிரதேசத்தில் குவிந்து காணப்பட்ட பொலித்தீன் பைகள் மற்றும் லஞ்சீற்றுகள் என்பன யாழ்.மாநகராட்சி மன்றத்தால் நேற்று அகற்றப்பட்டன.

சுற்றுச்சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் இந்தப் பொலித்தீன்கள் முற்றவெளி சுற்றுச் சூழலில் நிறைந்து காணப்பட்டன.

அண்மையில் இடம்பெற்ற இசை நிகழ்ச்சி மற்றும் களியாட்ட நிகழ்வுகளின்போது மக்கள் அவற்றைப் பயன்படுத்திவிட்டு வீசிச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-17)

## தீயணைப்பு வசதிகள் கச்சதீவில் தாராளம்!

கச்சதீவு திருவிழாவை முன்னிட்டு தீயணைப்பு வசதிகள் இம்முறை பலப்படுத்தப் பட்டுள்ளன.

கடந்த வருடம் இடம்பெற்ற கச்சதீவு திருவிழாவின்போது திடீரென தீ விபத்து ஏற்பட்டது. கடற்படையினரின் கடும் முயற்சியால் தீ விபத்து கட்டுப்படுத்தப்பட்டு பெரும் அசம்பாவிதம் தடுக்கப்பட்டது. இந்த நிலையிலேயே முன்னேற்பாடாக கச்சதீவில் இம்முறை பலமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (ம-125)



## கனியமணல் பரிசோதனை; மக்கள் திரண்டு எதிர்ப்பு!

தலைமன்னார் பியர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை கனிய மணல் பரிசோதனை முயற்சிக்கு அப்பகுதி மக்கள் திரண்டு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். மணல் பரிசோதனை செய்யும் உபகரணங்களுடன் நேற்று முன்தினம் மாலை தலைமன்னார் பியர்ப் பகுதிக்கு வருகை தந்த குழுவினர், தாங்கள் ஓர் ஒப்பந்த நிறுவனம் என்று தெரிவித்து அதானி குழுமத்தினருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தைக் காண்பித்து மணல் பரிசோதனை மேற்கொள்ள முயன்றனர்.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் திரண்டு கடும் எதிர்ப்புகளை வெளியிட்டனர். (ச-20)



யாழ்.நகரில் கே.கே.எஸ். வீதியில் எழுந்தருளியிருக்கும் கடைத்தெருப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-17)

இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்
பிரிவு-52
ஆரம்பம்: 02.03.2024
10.00 AM
★ Diploma in English / Spoken English
★ Diploma in ICT/ Artificial Intelligence
★ Diploma in Singalam
★ Diploma in Psychology & Counselling
★ Diploma in Care giving
★ Diploma in Commercial Cookery
★ Diploma in Child care
★ Diploma in Nursing Assistatnt
★ Diploma in Political Science
காலம்: 03 மாதங்கள்
அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
IPS
to your future
Thirunelvely, Jaffna
T.P: 074 234 9120

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களுடன் அரசியல்: ஒருபோதும் நடக்காது



## பொன்சேகா திட்டவட்டம்

**கொழும்பு, பெப். 24**

**ராஜபக்சக்களுடன் இணைந்து அரசியல் செய்வதற்கு நான் தயாரில்லை. மொட்டுக் கட்சி ராஜபக்சக்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்வரை அக்கட்சியுடன் குறைந்தபட்சம் பேச்சுக்குக்கூட செல்லமாட்டேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**

பொன்சேகாவுக்காக மஹிந்தவின் சலூன் கதவு திறந்தே உள்ளது என மொட்டுக் கட்சித் தரப்பில் தெரிவிக்கப்படும் கருத்துகள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பொன்சேகா இவ்வாறு கூறினார்.

"ராஜபக்சக்களுக்கு வெட்கம் இருக்குமானால் அவர்களும் என்னுடன் அரசியல் செய்யமாட்டார்கள். மொட்டுக் கட்சியில் சில நல்லவர்களும் உள்ளனர்"- என்றார் பொன்சேகா. (ஒ-44)

# சஜித் - பொன்சேகா மோதல்; எனக்குத் தொடர்பில்லை

## டயானா கமகே தெரிவிப்பு

கொழும்பு, பெப். 24

ஐக்கிய மக்கள் சக்தியை உடைப்பதற்கான ஒப்பந்தத்தை நான் நிறைவேற்றவரவில்லை. அக்கட்சியுடன் பொன்சேகா முரண்பட்டுள்ளமைக்கும் எனக்கும் தொடர்புகிடையாது என்று இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

அரசின் நிகழ்ச்சி நிரலுக்கமையவே பொன்சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து வெளியேற்றி, கட்சிக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கு டயானா கமகே முயற்சித்துள்ளார் என சஜித் அணியினரால் முன்வைக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். (ஒ-44)

# போதைப்பொருள் பாவனை: சிறையில் 1,500 சிறுவர்கள்!

கொழும்பு, பெப். 24

போதைப்பொருள் குற்றங்களுக்காக 1000 முதல் ஆயிரத்து 500 வரையான சிறுவர்கள் சிறைச்சாலையில் உள்ளனர் என்று சிறைச்சாலை ஆணையாளர் ஜகத் சந்தன வீரசிங்க தெரிவித்துள்ளார். காலி நாகொட பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் நடைபெற்ற நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார். (ச-இ)

# விவசாயத் தொழில்நுட்பம் வியட்நாமுடன் ஒப்பந்தம்

கொழும்பு, பெப். 24

இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் விவசாய தொழில்நுட்பப் பரிமாற்றம் மற்றும் விவசாயத்துறையின் அபிவிருத்தி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

விவசாய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கும் வியட்நாமின் விவசாய மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சர் ஆகியோருக்குமிடையே அண்மையில் இடம்பெற்ற இருதரப்பு கலந்துரையாடலில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இதில் விவசாயத் தொழில்நுட்பம், ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சி, அனுபவப் பரிமாற்றம், மேம்பட்ட விதை உற்பத்தி, உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகளைப் பயன்படுத்துதல், விவசாயிகள் மற்றும் அதிகாரிகளுக்கு பயிற்சி அளித்து அதிக விளைச்சல் பெறுவது போன்ற பல விடயங்கள் உள்ளடங்குகின்றன என்று அமைச்சர் அமரவீர தெரிவித்தார். (ச-இ)


# வரிசைக்கு முற்றுப்புள்ளி; விரைவில் ஈ–பாஸ்போர்ட்

கொழும்பு, பெப். 24

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்தில் நீண்டு செல்லும் வரிசைகளைக் குறைக்கும் வகையில் விரைவில் ஈ- பாஸ்போர்ட் (E Passport) சேவையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

"குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்கள அலுவலகத்துக்கு முன்பாக மீண்டும் வரிசைகள் அதிகரித்துள்ளன. அதனைத் தீர்க்கும் வகையில் கொரிய அரசுடன் பேச்சு நடத்தி தேர்வில் சித்தி பெறுபவர்களுக்கு மாத்திரம் கடவுச்சீட்டு வழங்க ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

மேலும் புதிய டிஜிற்றல் அடையாள அட்டையை ஆட்கள் பதிவு திணைக்களத்தின் ஊடாக வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)



# மற்றொரு படைத்தளபதி ஐ.ம.சக்தியுடன் சங்கமம்

யாழ்ப்பாணம், பெப். 24

முன்னாள் இராணுவ தளபதியும், இலங்கை இராணுவ பதவி நிலை பிரதானியுமான மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகே ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்துள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமை அவர் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைச் சந்தித்து ஐக்கிய மக்கள் சக்திக்கு தனது ஆதரவைத் தெரிவித்து இணைந்துகொண்டார்.

அதனையடுத்து அவரை ஐக்கிய மக்கள் சக்தியில், 'ஊழல்எதிர்ப்புகொள்கை மற்றும் அமுலாக்கல் பிரிவின் பிரதானியாகவும் ஊழல் எதிர்ப்புப் பயணத்தின் ஆலோசகராகவும் எதிர்க்கட்சித் தலைவர்சஜித்பிரேமதாஸ நியமித்துள்ளார். (ச-இ)

# மின்னணு சிகரெட்; மாணவர்களிடம் மீட்பு

கொழும்பு, பெப். 24

தென்னிலங்கையில் பாடசாலை மாணவர்களிடமிருந்து புகைபிடிக்கும் இலத்திரனியல் சாதனமான ஈ - சிகரெட்டுகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

'யுக்திய' வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவை கைப்பற்றப்பட்டன.

வர்த்தகர் ஒருவரிடமிருந்து 6 ஆயிரத்து 500 ரூபாவுக்கு மாணவனொருவன் அதை கொள்வனவு செய்துள்ளமை தெரியவந்ததையடுத்து குறித்த வர்த்தகரை கைதுசெய்து விசாரணைக் குட்படுத்தியபோது மேலும் இரண்டு இலத்திரனியல் புகைபிடிக்கும் கருவிகள் பாடசாலை மாணவர்களிடமிருந்து மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# நிறைவேற்று அதிகாரம் தொடர வேண்டும்!

கொழும்பு, பெப். 24

இலங்கையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை தொடர வேண்டும். அந்த முறைமையை நீக்குவதற்கு ஆதரவளிக்கப்போவதில்லை என்று இராஜாங்க அமைச்சர் டயானா கமகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டின் தற்போதைய நிலைமை, பிரச்சினை, கடந்தகால சம்பவங்கள் என்பவற்றை அடிப்படையாகக்கொண்டு பார்க்கும்போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீடிக்கப்படவேண்டும். ஆனால் சிறந்த ஆளுமையுள்ள தகுதியான ஒருவரே அப்பதவிக்கு வரவேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்கு கோத்தாபய ராஜபக்ச முயற்சித்தபோதும் அதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்தேன். நிறைவேற்று ஜனாதிபதி முறைமையில் கைவைக்கும் முயற்சிக்கு ஆத ர வாக நான் கை உயர்த்தப்போவதில்லை- என்றார். (ஒ-44)

# குற்றங்களுடன் தொடர்பு: 13 பேர் டுபாயில் கைது!

கொழும்பு, பெப். 24

நாட்டில் இடம்பெற்ற குற்றச்செயல்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் 13 பேர் டுபாயில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெலியத்தவில் ஐவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் உள்ளனர் என்றும் கைது செய்யப்பட்டவர்களை இலங்கைக்கு அழைத்து வந்து விசாரணைக்குட்படுத்த ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் குற்றப்புலனாய்வுத்திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-இ)



யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுக்காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகி ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில், இலங்கை தொடர்பில் மார்ச் மாதம் 4ஆம் திகதி கவனத்தில் கொள்ளப்படவுள்ளதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர் கடந்த வருடம் நடைபெற்றபோது 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் உள்ளடக்க அமுலாக்கத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளரின் எழுத்து மூல அறிக்கை வாசிக்கப்பட்டது. மனித உரிமைகள் விவகாரம் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதியை வழங்கும் செயற்பாட்டில் இலங்கை மந்தகதியில் செயற்படுவதாக ஆணையாளர் குற்றச்சாட்டுகளையும் இதன்போது முன்வைத்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக இம்முறை இடம்பெறும் 55ஆவது கூட்டத்தொடரில் அரசாங்கத்தின் மீது சில அழுத்தங்களை மனித உரிமைகள் பேரவை பிரயோகிக்கும் என்றும், கடந்த முறை சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மீதான இலங்கையின் அடைவுகள் எத்தகையனவாக இருக்கின்றன என்பது தொடர்பிலும் இம்முறை கவனம் செலுத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இலங்கையில் தற்போது சர்ச்சைக்குரியனவாக மாறியுள்ள நிகழ்நிலைக் காப்புச்சட்டம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பிலும் இம்முறை தனது கரிசனையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை வெளிப்படுத்தவும் அதிகளவான வாய்ப்புகள் உள்ளன என்று கருதப்பட்ட பின்னணியில், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான உயர்மட்டக் குழுவொன்று மார்ச் முதல் வாரத்தில் ஜெனிவா சென்று ஐ.நா.வை எதிர்கொள்ள வியூகங்களை அமைக்கவுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் வெளிவந்தன. அதன் தொடர்ச்சியாக அணிசேரா நாடுகளின் ஆதரவைப் பெற்று ஐ.நா.வில் தன் பலத்தை நிரூபிக்க இலங்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தற்போது தெரியவருகின்றது. ஐ.நா.வில் இலங்கை தொடர்பான விவாதத்துக்கு இன்னும் இரண்டு வாரங்களுக்கும் குறைவான காலப்பகுதியே உள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தின் ஒவ்வொரு நகர்வும் சர்வதேச அளவில் கூர்ந்து அவதானிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## வழக்குகளை...

எதிர்கொள்ளும். வழக்கை எதிர்கொள்வதற்கு ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே.வி.தவராசா, புவிதரன், சிரேஷ்ட சட்டத்தரணி என்.சிறிகாந்தா, சிவானந்தராஜா ஆகியோரைக் கொண்ட சட்டவாளர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறும் பட்சத்தில், யாப்பை மீறியே பொதுச்சபைக் கூட்டமும், தெரிவுகளும் இடம்பெற்றதாக நீதிமன்று கருதினால், மீளவும் நீதிமன்ற மேற்பார்வையோடு மூலக்கிளைத் தெரிவில் இருந்து நிர்வாகத் தெரிவு வரை நடத்துமாறும் கோருவோம்' என்று இந்த ஆலோசனைக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

வழக்காளிகளுடன் பேசுவதற்கு இதுவரை கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இருந்த மருத்துவர் ப.சத்தியலிங்கம், முன்னாள் மட்டக்களப்பு மேயர் தி.சரவணபவன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரைக் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவினர் அடுத்த சில நாள்களுக்குள் நீதிமன்றங்களில் வழக்குத் தொடுத்தவர்களுடன் பேச்சுகளை நடத்துவார்கள். பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்து, நிபந்தனையற்ற வகையில் வழக்குகளைக் கைவாங்க அவர்கள் மறுக்கும் பட்சத்தில் வழக்கை எதிர்கொள்வதற்கு கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இந்தக் கூட்டத்தில் எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் ஆகியோர் பங்குபற்றவில்லை. அவர்களுக்கு எதிராகக் காரசாரமான கருத்துக்கள் கூட்டத்தில் பங்குபற்றிய சிலரால் முன்வைக்கப்பட்டன.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரான மாவை சேனாதிராஜா, கட்சியின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சீனித்தம்பி யோகேஸ்வரன், அரியநேந்திரன், சிறிநேசன், சாந்தி சிறீஸ்கந்தராஜா, சிவமோகன், வடமாகாண அவைத்தலைவர் சி.வீ.கே.சிவஞானம், இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட குகதாசன், ஜனாதிபதி சட்டத்தரணியும் கொழும்பு கிளைத் தலைவருமான கே.வி.கே.தவராசா, வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர்களான சயந்தன், ஆர்னோல்ட், யாழ்ப்பாணத்தில் கட்சி மீது வழக்குத் தொடுத்த பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்ட பலரும் இதில் பங்கேற்றனர். (அ-ம-113)

## ஊடக...

துள்ளனர். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஆலயங்களில், 34 ஆண்டுகளின் பின்னர் வழிபாடு நடத்துவதற்கு இராணுவத்தினரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதற்கு அமைவாக ஆலயத்துக்குச் செல்பவர்கள் வசாவிளான் மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தின் வாசல் பகுதிக்கு வருகை தருமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே, வசாவிளான் பாடசாலைக்கு முன்பாகவுள்ள இடத்தில் வைத்து இராணுவத்தினரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பான செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட 'உதயன் டிஜிற்றல்' ஊடகவியலாளர்கள் உட்பட மூன்று ஊடகவியலாளர்கள் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கு நின்ற இராணுவத்தினர் ஊடகவியலாளர்களின் கைத்தொலைபேசிகளைப் பறித்து அதிலுள்ள காணொலிகளை அழித்தனர். இராணுவ முகாமையோ அல்லது இராணுவத்தினரையோ காணொலிகள் எடுக்காதபோதும், கைத்தொலைபேசியிலிருந்த மக்களின் கருத்துக்கள் அடங்கிய காணொலிகளையே இராணுவத்தினர் அழித்தனர்.

அத்துடன் ஊடகவியலாளர்களை தனித்தனியாக தம [illegible] இராணுவத்தினர் ஒளிப்படம் எடுத்ததுடன், ஊடகவியலாளர்களின் அடையாள அட்டையையும் ஒளிப்படம் எடுத்தனர். ஊடகவியலாளர்கள் அந்த இடத்தில் தமது பணியைச்செய்ய முடியாதவாறு பின்னர் அதிகளவான இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டனர். (அ-ம-ஒ-5-27)

## உயர்...

வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஆலயங்களில் வழிபாடுகளை மேற்கொள்வதற்காக அண்மையில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், அதைச் சாதகமாகப் பரிசீலித்த இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள ஏழு ஆலயங்களுக்கு பொதுமக்களை அழைத்துச் செல்லும் நடவடிக்கைகளை

முன்னெடுத்திருந்தனர். இவற்றில் கட்டுவன் காசியம்பாள் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், மானப்பிராய் பிள்ளையார், சிவன் ஆலயம், வன்னியர் ஆலயம், சக்தியுடையாள் அம்மன் ஆலயம் ஆகிய ஆலயங்களை மக்கள் நேற்றுத் தரிசித்தனர். பலாலி வடக்கு இராஜேஸ்வரி அம்மன் ஆலயம், பலாலி வடக்கு நாகதம்பிரான் ஆலயம் என்பனவற்றுக்கு மக்கள் நேற்றுச் செல்லவில்லை. சுமார் 300 பேர் கடும் பாதுகாப்புக்கு மத்தியில் இராணுவ வாகனங்கள் மூலம் நேற்றையதினம் இவ்வாறு உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். அலைபேசி கள் மற்றும் இலத்திரணியல்பொருள்களைக்கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்ததுடன், பூசைப் பொருள்களைக் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்பட்டிருந்தது. மூன்று தசாப்தங்களின் பின்னர் தங்களின் பூர்வீக ஆலயங்களைப் பார்வையிட்ட மக்கள் ஆலயங்களின் தற்போதைய சிதில நிலையைக் கருத்திற்கொண்டு மிகவும் உணர்வுபூர்வமாக இருந்ததையும் அவதானிக்க முடிந்தது. (அ-ம-26)

## ஹவுத்திக்கு...

தலைமையிலான அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு பிரதி இராஜாங்கச் செயலாளர் தனது பாராட்டைத் தெரிவித்தார்.

விவசாய நவீனமயமாக்கல் வேலைத்திட்டம் உட்பட இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்படும் முக்கியமான பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மற்றும் கடன் மறுசீரமைப்பு செயல்முறைகளின் முன்னேற்றம் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளருக்கு விளக்கமளித்தார்.

உலக பாதுகாப்புத் தொடர்பான விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், செங்கடலில் இடம்பெறும் கடற்படை நடவடிக்கைகளுக்கு இலங்கை அரசு வழங்கிய ஆதரவுக்கும் பிரதி இராஜாங்கச் செயலாளர் தனது நன்றியைத் தெரிவித்தார். (அ-ம-44)

## பேருந்திலிருந்து...

உள்ள சிகை அலங்கரிப்பு நிலையத்தில் பணிபுரியும் குறித்த இளைஞர் நேற்றுக் காலையில் பருத்தித்துறையில் இருந்து தனியார் பேருந்தில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துள்ளார். பேருந்தின் மிதிபலகையில் நின்று பயணித்தபோது நல்லூர் கந்தசாமி கோவிலுக்கு முன்பாக உள்ள வளைவில் தவறி கீழே [illegible] பேருந்தின் சக்கரம் கீழே தவறி விழுந்த இளைஞனின் தலையால் ஏறி இறங்கியதில் தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் யாழ். போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார்.

பேருந்தின் சாரதியும், நடத்துனரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26-66-100)

## நகைத்...

சலைப் பயன்படுத்தி இவர்கள் நகைத் திருட்டில் ஈடுபட்டுள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் வைத்திருந்த குளிர்பானப் போத்தலுக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே நான்கரைப் பவுண் தாலி பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேக நபர்கள் இருவரையும் விசாரணை களின் பின்னர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ப-66-26)

## புதையல்...

காணியொன்றில் நால்வர் அடங்கிய குழுவினர் புதையல் தோண்டும் முயற்சியில் ஈடுபடுகின்றனர் என்று பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதனால் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்த முல்லைத்தீவுப் பொலிஸார் புதையல் தோண்டிய நால்வரையும் கைது செய்தனர். கைதானவர்கள் 45, 42, 31, 30 வயதுடையவர்கள். அவர்களில் இருவர் புதுமாத்தளன் பகுதியைச் சேர்ந்தவர். ஒருவர் ஒட்டுசுட்டான் பகுதியையும், மற்றையவர் கைவேலிப் பகுதியையும் சேர்ந்தவர் என்று பொலிஸார் தமது முதற்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரிவித்துள்ளனர். (அ-ம-19)

## 40,000...

இந்தத் தகவலை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும் மக்கள் இதுதொடர்பில் அவதானமாக செயற்படவேண்டும் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் மருத்துவர் சமில் விஜேசிங்க தெரிவித்தார். (ச-இ)

## கச்சதீவு...

தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

திருவிழாவுக்காக இலங்கையிலிருந்து சுமார் 4 ஆயிரத்து 400 பேர் கலந்துகொண்டுள்ளனர். இந்திய மக்கள் திருவிழாவைப் புறக்கணித்துள்ளனர். அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் இலங்கையில் சிறையிடப்பட்டுள்ள நிலையில், அவர்களின் விடுதலையை வலியுறுத்தியே இந்திய மக்கள் கச்சதீவுத் திருவிழாவுக்கு வருகை தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல் நிகழ்வுக்கு பொலிஸாரால் தடை!

திருகோணமலை, பெப். 24

திருகோணமலை மாவட்டத்தின் எல்லைக்கிராமமான தென்னைமரவாடி கந்தசாமி மலை முருகன் ஆலயத்தில் வருடாந்த பொங்கல் வழிபாடுகளுக்குச் சென்ற மக்களுக்கு, புல்மோட்டை பொலிஸாரால் நீதிமன்ற தடையுத்தரவு வழங்கப்பட்டு பொங்கல் நிகழ்வை நடத்த விடாது தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாதாந்தம் பௌர்ணமி தினத்தன்று தென்னைமரவாடி கிராம மக்களால் நடத்தப்படும் பொங்கல் விழா வழமை போன்று நேற்றும் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. கிராம மக்கள் மற்றும் திருகோணமலை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான பக்தர்கள் மற்றும் சிவில் அமைப்பினர் விழாவில் கலந்து கொள்ளவந்திருந்தனர். பொங்கல் விழாவுக்கான ஏற்பாடுகள் இடம்பெற்றபோது ஆலய வளாகத்துக்குள் திடீரென நுழைந்த நூற்றுக்கணக்கான பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர், புலனாய்வாளர்கள் கலகம் அடக்கும் ஆயுதங்களுடன் வருகைதந்து மக்களைத் தடுத்து வைத்தனர்.

புல்மோட்டை பொலிஸாரால் திருகோணமலை நீதிவான் நீதிமன்றில், தென்னைமரவாடி கந்தசாமி மலை முருகன் கோவில் அமைந்துள்ள பிரதேசம் சங்கமலை புராதன விகாரைக்குரிய இடமான தொல்லியல் பிரதேசம் என்பதால், அப்பகுதிக்குள் உள்நுழைந்து இந்துமத வழிபாடுகளில் ஈடுபடுவது மற்றும் ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபடுவது ஆர்ப்பாட்டம் ஏற்படக்கூடிய வகையில் செயற்பாடுகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை தடுக்குமாறு கோரி நீதிவான் மன்றில் செய்த விண்ணப்பத்துக்கு ஏற்றவகையில் நீதிமன்றம் வழங்கிய தடையுத்தவின் அடிப்படையில் பொங்கல் விழாவைத் தடுத்து நிறுத்தினார்கள்.

தென்னைமரவாடி முற்றுமுழுதான தமிழ்ப் பிரதேசமாக இருந்தது. 1984ஆம் ஆண்டு இடம்பெற்ற இன மோதல்களையடுத்து அந்தப் பகுதி மக்கள் தங்களின் இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்தனர். 2010ஆம் ஆண்டு மீண்டும் தமிழ் மக்கள் அங்கு குடியேறியபோது பெருமளவான தமிழ் மக்களின் பகுதிகள் சிங்களமயமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# உண்மையை பேணவேண்டும்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.24

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தங்கள் அறிக்கைகளில் உண்மைத்தன்மையைப் பேணவேண்டும். கொழும்பில் இருந்துவரும் ஆணைக்குழுக் களைப் போன்று எமது கருத்துக்கு மாறான அறிக்கைகளை வெளியிடக்கூடாது என்று குரலற்றவர்களின் குரல் அமைப்பின் இணைப்பாளர் மு.கோமகன் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஆணையாளர் உள்ளடங்கிய குழுவைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம் என்பவற்றைச் சுட்டிக்காட்டியிருந் தோம். ஜெனிவாக் கூட்டத்தொடர் நடைபெறவுள்ள நிலையில் எம்மை வந்து சந்தித்துள்ளனர். முன்னரும் பலர் எம்மைச் சந்தித்துள்ளனர். அவறால் எந்தப்பயனும் கிடைக்கவில்லை. இந்தச் சந்திப்பு அவ்வாறானதாக அமையக்கூடாது என்பது எமது எதிர்பார்ப்பு - என்றார். (ஏ-125)

# இந்திய குருமுதல்வர்கள் கச்சதீவுக்கு வருகை!

யாழ்ப்பாணம், பெப். 24

இந்திய மறைமாவட்டங்களின் ஐந்து குருமுதல்வர்கள் கச்சதீவு திருவிழாவுக்காக நேற்று மாலை ஆலயத்தைச் சென்றடைந்தனர்.

தமிழக மீனவர்கள் இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளமையைக் கண்டித்து இந்திய மக்கள் இம்முறை கச்சதீவு திருவிழாவைப் புறக்கணித்துள்ளனர். எனினும் இந்திய மறைமாவட்டங்களின் ஐந்து குருமுதல்வர்கள் கச்சதீவு திருவிழாவில் பங்கெடுப்பதற்காக கச்சதீவை நேற்றுமாலை சென்றடைந்தனர். (ம-125)

# மாசிமக உற்சவம்

யாழ்ப்பாணம், பெப்.24

உரும்பிராய், காளி அம்பாள் ஆலயத்தில் மாசிமக அபிஷேகம் இன்று சனிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விசேடபூஜைகளைத் தொடர்ந்து அம்பாள் திருவீதிஉலாவலம் வரும்திருக்காட்சியும் நடைபெறுமென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (ப-66)


# ஏகசண்டி ஹோமம்

பருத்தித்துறை, கோட்டுவாசல் அருள்மிகு ஸ்ரீ சண்டிகா பரமேஸ்வரி ஆலயத்தின் ஏகசண்டி ஹோமக் கிரியைகள் குறித்த ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளன. அடியார்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (ப-100)

திருநெல்வேலி அம்மாச்சி
உணவகத்திற்கு அருகில் காணி உடன் விற்பனைக்கு
யாழ்ப்பாணம் திருநெல்வேலி
அம்மாச்சி உணவகத்திற்கு
அருகாமையில், நேர்முன்பாக உள்ள
5 பரப்புக் காணி உடனடியாக
விற்பனைக்கு உண்டு.
தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.
தொடர்பு:- 076 206 1703

கட்டட ஒப்பந்தகாரர்களுக்கு
இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட் நாமிலிருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட கொங்கிறீற் மிக்சர் (Concrete Mixer) மற்றும் இத்தாலியில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மின்னுயர்த்தியும் (Hoist) இப்பொழுது எம்மிடம்.
குறிப்பு: இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் கொங்கிறீற் மிக்சர் (Original) வடபகுதியில் எம்மிடம் மட்டுமே. போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"
ஆர்க். என். கம்பனி

• 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
• A9 வீதி, ஏழாலை. 070 191 3571
• A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020
Hotline: 071 535 7799 / 071 973 9917

ALLIANCE FRANCAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
➢ யாழ்ப்பாணத்தில் French Embassy கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் Alliance Francaise மட்டுமே.
➢ அங்கீகரிக்கப்பட்ட Certificates International Diplomas (delf)
➢ தமிழ் மொழிமூலம் பிரெஞ்சு நாட்டு ஆசிரியரினாலும் கற்பிக்கப்படும்
➢ French Embassy இன் அனுமதியுடன் திருமண அத்தாட்சிப் பத்திரங்கள் தமிழ் மொழி மூலம் மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்கப்படும். (இங்கே மட்டும்).

021 222 8093 17, Kandy Road, Jaffna

காணி விற்பனைக்கு
இராசபாதை வீதியில்
3 பரப்புக் காணி
விற்பனைக்குண்டு.
077 986 5457

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் கோயில் அருகாமையில் 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
➤ குடியிருப்பு சூழவுள்ள பகுதி
➤ தரகர் தேவையில்லை
➤ 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது
தொடர்பு: 071 173 3911
076 853 5022

மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு
TVS Wego BBA தொடரிலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
077 706 6487 (யாழ்ப்பாணம்)

வேலையாட்கள் தேவை
கடை ஒன்றிற்கு கணினி தொடர்பான அறிவுள்ள ஆண்/பெண் வேலையாட்கள் தேவை.
077 469 8605, 076 760 0403

மணமகள் தேவை
1985" ஆண்டில் பிறந்த (V) கனடா குடியுரிமையை கொண்ட (Canadian Citizen) விவாகரத்து பெற்ற உதயம் செவ்வாய் மணமகனுக்கு.
மணமகள் தேவை.
075 538 9986

காணி விற்பனைக்கு
ராஜபாதை வீதி, கரந்தன் - இராமுப்பிள்ளை வித்தியாலய முன் வீதியில் (மிக அண்மையில்) 11 பரப்புத் தோட்டக்காணி விற்பனைக்கு உள்ளது.
075 970 1948, 077 307 5198



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் ... இலுள்ள அவர்களது பணிமனையில் 24.02.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.